**KALANJIYAM (களஞ்சியம்) - International Journal of Tamil Studies**
International Refereed Peer Reviewed Research Journal eISSN ***2456-5148*** *(Online)*
Journal Vol 4, Issue 02, May 2025 https://doi.org/10.63300/

# Dreams in Literature

***Dr. J. Kaveri,***

*Assistant Professor, Department of Tamil,*
*V.V. Vanniaperumal College for Women, Virudhunagar. Email: kaveri@vvvcollege.org.*

Received 25/04/2025
Accepted for publication 30/04/2025
Published 01/05/2025

***Abstract***

*Dreams in literature are employed as a means to express the dreamer's state of mind, emotions, desires, and fears. Dreams play a significant role in numerous literary works, utilized across various forms such as narratives, poetry, and drama. As an integral part of literature, dreams are used to set the stage for a work, introduce a turning point, or foreshadow the story's conclusion. In poetry, dreams serve as a central theme, a means to convey emotions, or to imbue a poem with new meaning. Within dramatic works, dreams constitute a key element, utilized to reveal characters' emotions or to foreshadow the play's resolution. Furthermore, such dreams are employed in literature as a narrative device to indicate future events in advance. This study, therefore, aims to investigate the manner in which dreams are presented and manifested in literary works..*

***Keywords****: Dreams, Literature, Tamil Literature*

---

# இலக்கியங்களில் கனவு

**முனைவர் ஜெ.காவேரி,**

**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**

**வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.**

*Email: kaveri@vvvcollege.org*

## *கட்டுரைச் சுருக்கம்:*

*இலக்கியங்களில் கனவுகள் என்பது, கனவு காண்பவரின் மனநிலை, உணர்ச்சிகள், ஆசைகள், பயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் ஒரு வழியாகப் பயன்படுத்தப்படுகிறது. கனவுகள் பல இலக்கியப் படைப்புகளிலும் முக்கியப் பாத்திரத்தை வகிக்கின்றன, அவை கதை, கவிதை, நாடகம் என பல வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன. கனவுகள் இலக்கியத்தின் ஒரு பகுதியாக பயன்படுத்தப்பட்டு, படைப்பின் தொடக்கத்தை முன்வைக்கவோ, ஒரு திருப்பத்தை ஏற்படுத்தவோ, அல்லது கதை முடிவை வெளிப்படுத்தவோ பயன்படுகிறது. கனவுகள் கவிதையின் கருப்பொருள், உணர்ச்சிகளை வெளிப்படுத்த, அல்லது கவிதைக்கு ஒரு புதிய அர்த்தத்தை கொடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கனவுகள் நாடகத்தின் ஒரு முக்கிய பகுதியாக, கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவோ, அல்லது நாடகத்தின் முடிவை வெளிப்படுத்தவோ பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கனவுகள் என்பது இலக்கியங்களில் பின்னர் நிகழ இருப்பதை முன்னரே உணர்த்தும் ஓர் உத்தியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வகையில் இலக்கியங்களில் கனவுகள் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை ஆய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.*

---

***கனவின் வழி அகச்செய்திகள்***

*சங்க இலக்கியங்களில் ஏறத்தாழ 44 இடங்களில் கனவுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதாக ச.வே.சுப்ரமணியம் குறிப்பிடுகின்றார். அவை தலைவன், தலைவி,, விலங்குகள், பறவைகள் கண்டனவாக காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை அகம் பற்றிய குறிப்புகளை வெளிப்படுத்துவனவாகவே காணப்படுகின்றன.*

*கோட்டுமீன் வழங்கும் வேட்டம் மடி பரப்பின்*

*வெள் இறாக் கனவும் நள்ளென் யாமத்து,*

*'நின் உறு விழுமம் களைந்தோள்*

*தன் உறு விழுமம் நீந்துமோ!' எனவே.(அகநானூறு – 170*

*கடலில் மேயும் **சிறுகாக்கை** களைப்போடு இளைப்பாறுகையில் தாழம்பூ மடலில் தன் பெண்ணோடு அமர்ந்துகொண்டு கனாக் காணும். சுறாமீன் வேட்டைக்குச் செல்வோர் உறங்கும் நள்ளிரவில் கனாக் காணும். வெள்ளை இறால் மீன்களை உண்பது போல் கனாக் காணும். இப்படிக் காக்கை கனாக் காணும் நள்ளிரவு வேளை இது. என்று நெய்தல் நிலம் பற்றிய குறிப்பில் கடற் காக்கையின் கனவு பற்றிய குறிப்பானது காணப்படுகின்றது. ஆனால் இப்பாடலில் உள்ளுறை உவமம் பழி தலைவியின் பிரிவுத்துயர் குறிப்பிடப்படுகின்றது. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நிலை இங்கு காக்கையின் வழி உவமிக்கப்படுகின்றது.*

*அதனைப் போன்றே கலித்தொகையில், தலைவனை நனவில் பிரிந்து வாடும் தலைவி தலைவனைக் கனவில் கண்ட மகிழ்ந்து பின் அது கனவு என்று எண்ணி வருந்தும் நிலையினை,*

*நனவு எனப் புல்லுங்கால், காணாளாய், கண்டது*

*கனவு என உணர்ந்து, பின் கையற்று, கலங்குமே (கலித்தொகை – 126)*

*என்ற பாடல் வரிகளானது புலப்படுத்துகின்றது. இப்பொருள் படவே கலித்தொகையின் 128, 142 ஆகிய பாடல்களிலும் கனவில் தலைவனைக் கண்டு மகிழ்ந்து நனவில் துன்பப்படும் தலைவியின் நிலை சுட்டப்பட்டுள்ளது.*

*கேட்டிசின் வாழி தோழி அல்கற்*

*பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇய*

*வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து*

*அமளி தைவந் தனனே குவளை*

*வண்டுபடு மலரிற் சாஅய்த்*

*தமியேன் மன்ற அளியேன் யானே. (குறுந்தொகை – 30)*

*இக்குறுந்தொகைப் பாடலில் பொருளுக்காக பிரிந்து சென்றுள்ள தலைவன் கனவில் தன்னிடம் வந்த செய்தியைத் தோழியிடம் கூறுகின்ற தலைவி சில நிமிடங்களாயினும் கனவிலாவது அவனைக் கண்டேனே என்று துன்பத்துடன் இன்பம் கலந்து பேசுவதாகக் காணப்படுகின்றது.*

இவ்வாறு தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி கனவில் தலைவனைக்க ண்டு வருந்துவதாய் பெரும்பாலான பாடல்கள் காணப்படுகின்றன. அதனைப் போன்றே கனவு கண்டு வருந்தும் தலைவன் நிலையைக குறுந்தொகைப் பாடல் ஒன்று விளக்குகின்றது.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன்னுடைய கனவில் தலைவியைக் காண்கிறான். அவன் தூக்கத்தி லிருந்து விழித்துக்கொள்கிறான். அங்கே தலைவியைக் காணவில்லை. அவன், கனவை நோக்கி, என் தலைவி யை இங்கு கொண்டுவந்ததுபோல் காட்டி, நீ என்னை ஏமாற்றிவிட்டாய். நீ இப்படி ஏமாற்றினாலும், தங்கள் துணையைப் பிரிந்திருப்பவர்கள் கனவிலாவது அவர்களைக் காண முடிந்ததே என்று எண்ணுவார்கள். ஆகவே , உன்னை இகழ மாட்டார்கள்,''

என்று கூறுகிறான். (குறுந்தொகை – 147)

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு

நெடு வரை மருங்கின் துஞ்சும் யானை,<br>
நனவில் தான் செய்தது மனத்தது ஆகலின்,<br>
கனவில் கண்டு, கதுமென வெரீஇ,<br>
புதுவதாக மலர்ந்த வேங்கையை<br>
அது' என உணர்ந்து, அதன் அணி நலம் முருக்கி,<br>
பேணா முன்பின் தன் சினம் தணிந்து, அம் மரம்<br>
காணும் பொழுதின் நோக்கல் செல்லாது,<br>
நாணி இறைஞ்சும் நல் மலை நல் நாட! (கலித்தொகை 49)

என்னும் பாடலில் யானை கண்ட கனவானது சுட்டப்பட்டுள்ளது. வளைந்த வரிக்கோடுகளை உடைய வரிப்புலியைத் தாக்கி வென்ற வருத்தத்துடன் உயர்ந்த மலைமேல் உறங்கும் யானையானது, நல்ல நினைவோடு தான் செய்த செயல் தன் மனத்தில் இருப்பதால் கனவில் அதனைக் கண்டு, புதிதாக மலர்ந்திருக்கும் வேங்கை மரத்தைப் பார்த்துப், புலி என்று எண்ணி, அதனை வளைத்து முறுக்கி ஒடித்துப் போட்டுவிட்டுப், பின்னர் சினம் தணிந்த பின்னர், நாணி, அந்த மரத்தைப் பார்க்கக் கூசும் மலைநாட்டின் தலைவனே! என்று தலைவனின் மலை நாட்டு வளத்தைச் சுட்டுமிடத்து யானையின் கனவானது சுட்டப்படுகின்றது. இது வெளிப்படையாக யானையின் கனவாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் உள்ளுறை உவமமானது ஊராரின் அலரினால் தோழியின் மீது கோபம் கொள்கின்ற தலைவியின் நிலை புலனாகின்றது.

திருக்குறளில், கனவுநிலை உரைத்தல் அதிகாரம் (122) இல், கனவு காதலனை பற்றியும், காதலின் தன்மையையும் விவரிக்கிறது. நனவில் காதலரை காண முடியாத போது, கனவில் அவரை காணும் போது தலைவியின் மகிழ்ச்சி, உயிர்வாழத் துணை புரிவதாகவும், நனவில் அருள் செய்யாத தலைவரை கனவில் காண்பதன் மூலம் தலைவியின் காதல் பலப்படும் என்றும் குறள் சொல்கிறது

இவ்வாறு கனவில் அகம் குறித்து சுட்டும் பொழுது பெரும்பாலும் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தலைவனைக் கணவில் கண்டு இன்பமடைந்து நனவில் அதை எண்ணி வருத்தமடையும் சூழலே பெரும்பாலும் காணப்படுகின்றது. தலைவன் கண்ட அகக் கனவும் அத்தன்மைத்தாகவே நிலவுகின்றது. விலங்குகளின் தனவின் வழி உள்ளுறை வழி தலைவியின் துன்பநிலையே பெரும்பாலும் எடுத்துரைக்கப்படுகின்றது.

**கனவும் நிமித்தமும்**

*இலக்கியங்களில் கனவு என்பது பெரும்பாலும் நிமித்தங்களைச் சுட்டுவதற்காகவே புனைந்துரைக்கப்படுவதாய் காணப்படும். காப்பியங்களில் இதற்குரிய சான்றுகள் ஏராயமாய் உள்ளன. கனவுகள் நிமித்தங்களோடு தொடர்புடையவை, அதாவது கனவுகள் மூலம் எதிர்காலத்தில் நடக்கப்போகும் நல்ல அல்லது கெட்ட நிகழ்வுகளை அறியலாம். குறிப்பாக, கனவில் இயற்கைக்கு மாறான அல்லது விசித்திரமான நிகழ்வுகள் நிகழ்ந்தால், அவை ஒரு நிமித்தமாக கருதப்படலாம்.*

*நிமித்தம் என்பது வாழ்வின் மூலம் நடக்கப்போகும் நன்மை தீமைகளை குறிக்கும் ஒரு அறிகுறி. சில சமயங்களில், கனவுகள் மூலம் அந்த அறிகுறியை அறிய முடியும்.*

- *கனவுகளில் சில நேரங்களில் கடவுள் வந்து உரைப்பது போன்ற நிகழ்வுகள் நிமித்தங்களாக கருதப்படலாம்.*
- *இயற்கைக்கு முரண்பாடான செயல்கள், உதாரணமாக பறவை பேசினால் போன்ற கனவுகள் நிமித்தங்களாக கருதப்படலாம்.*
- *சில கனவுகள் நல்ல சகுனமாகவும், சில கனவுகள் கெட்ட சகுனமாகவும் கருதப்படலாம்.*
- *சிலப்பதிகாரத்தில், கண்ணகி மற்றும் கோவலனின் கனவுகள் எதிர்கால நிகழ்வுகளை முன்விளக்கும் நிமித்தங்களாக கூறப்பட்டுள்ளன.*

*“திசை இரு நான்கும் உற்கம் உற்கவும்,*
*பெரு மரத்து, இலை இல் நெடுங் கோடு வற்றல் பற்றவும்,*
*வெங் கதிர்க் கனலி துற்றவும், பிறவும்,*
*அஞ்சுவரத் தகுந புள்ளுக் குரல் இயம்பவும்,*
*எயிறு நிலத்து வீழவும், எண்ணெய் ஆடவும்,*
*களிறு மேல் கொள்ளவும், காழகம் நீப்பவும்,*
*வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்,*
*கனவின் அரியன காணா, நனவில்*
*செருச் செய் முன்ப! “ (புறநானூறு -40)*

*என்று புறநானூறு பாடல் தீக்கனா குறித்து பட்டியலிடுகின்றது. சீவகசிந்தாமணியில் விசயை, சிலம்பில் கண்ணகி, கோவலன், கோப்பெருந்தேவி ஆகியோர் கண்ட கனவு தீக்கனாவாகவும் பின்வரும் துன்ப நிலையை முன்னரே அறிவிக்கும் வண்ணமும் காணப்படுகின்றது. வருமொழி கூறல் என்னும் உத்திக்கு ஏற்ற விதத்தில் கனவானது காப்பியத்தில் காணப்படுகின்றது. ராமாயணத்தில் இரண்டு இடங்களில் கனவுகள் காணப்படுகின்றன. ஒன்று பரதன் கண்ட கனவு. இது விளையப் போகும் துன்பத்தைச் சுட்டுகின்றது. மற்றொன்று திரிசடை கண்ட கனவு. இது பின்னர் நிகழவிருக்கும் நன்மையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.*

*முத்துப்பட்டன் கதை போன்ற நாட்டார் இலக்கியங்களிலும் கனவானது இத்தகைய தன்மையில் தீக்கனாவாக இடம்பெற்று கதை மாந்தருக்கு பின்னர் நிகழும் துன்ப நிலையை முன்னரே வெளிப்படுத்தும் வண்ணம் காணப்படுகின்றது.*

***பக்தி இலக்கியங்களில் கனவுகள்***

*நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் நிறைய கனவுகள் வருகின்றன. பக்தி இலக்கியங்களிலும் கனவுகள் பல காணப்படுகின்றன. தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் நந்தனும் ஒருசேரக் கண்ட கனவைப் பற்றிச் சேக்கிழாரின் பெரிய புராணம் பேசுகின்றது. அதனைப் போன்றே புசலார் நாயனார் என்ற சிவனடியாரின்*

புகழ் போசுகின்ற இடத்திலும் காடவர் கோன் கனவில் சிவபெருமான் வந்ததாகச் சுட்டப்படுகின்றது. மேலும் ஆண்டாளின் புகழை எடுத்துரைக்க பெரியாழ்வாரின் கனவில் தோன்றி சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாய் திருமால் ஆண்டாளை உலகிற்கு காட்டினார். ஆண்டாளும் திருமாலைத் தன்னுடைய மணாளனாக எண்ணி அவரைத் திருமணம் செய்வதாகவும் திருமணத்திற்கான சடங்கு முறைகள் நடைபெறுவதாகவும் கனவு காண்கின்றார்.

இலக்கியங்களின் குறிப்படும்படியான ஓர் உத்தியாக கனவானது திகழ்கின்றது. தலைவன், தலைவி, விலங்குகள், பறவைகள் கனவு காண்பதாக இலக்கியங்களில் காணப்படுகின்றன. அகம் குறித்த கனவு செய்திகள் பெரும்பாலும் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் துன்ப நிலையை எடுத்துரைப்பதாய் காணப்படுகின்றது. தீ நிமித்தத்தை எடுத்துரைப்பதாகவும் இலக்கியங்களில் பெரும்பாலும் கனவுகள் இடம்பெறுகின்றன. வருமொழி உரைத்தல் எனும் இலக்கிய உத்தியாக இது பெரும்பாலும் காப்பியங்களில் காணப்படுகின்றது. பக்தி இலக்கியங்களில் கனவானது அடியார்களின் பெருமையினை உலகிற்குப் பறைசாற்றும் வண்ணம் தெய்வங்களே வந்து கூறுவதாய் அமைந்துள்ளது. இக்கால இலக்கியங்களிலும் கனவு குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. இலக்கியத்தின் ஓர் உத்தியாகவே கனவானது பெரும்பாலும் இடம்பெறுகின்றது என்பது இவ்ஆய்வின் வழி உணரமுடிகின்றது.

**குறிப்புதவி நூல்கள்**


1 இலக்கியக் கனவுகள் – ச.வே.சுப்பிரமணியம்

2 கலித்தொகை

3 குறுந்தொகை

4 சிலப்பதிகாரம்

5 திருக்குறள்

6 புறநானூறு

7 பெரியபுராணம்


***Reference Books***


*1 Literary Dreams – S.V.Subramaniam*

*2 Kalithokai*

*3 Kurunthokai*

*4 Silappadhikaram*

*5 Thirukkural*

*6 Purananuru*

*7 Periyapuranam*



Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.